**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 248/2021**

**வா.சா.1 – பாலகிருஷ்ணன்**

**<u>08–01–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழில் எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் அவ்வளவாக தெரியாது. நான் விவசாயம் செய்து வருகிறேன். நிலம் சம்பந்தமான விசயம் அனைத்தும் தெரியும் என்றால் தெரியாது. எனது நிரந்தர வசிப்பிட முகவரி என்ன என்றால் 3/10 ராமலிங்கபுரம் பெருந்தொழுவு திருப்பூர். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் தாத்தா வழியில் வந்தது. எனது தாத்தாவிற்கு பிறகு எனது அம்மாவிற்கு சொத்து வந்து அம்மாவிற்கு பிறகு எனது சகோதரிகள் இருவரும் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2015ம் ஆண்டு எனக்கு சொட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது செட்டில்மெண்ட் ஆவணத்தில் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 4 ஏக்கர் 17 செண்ட் ஒன்றும், 1 ஏக்கர் 39 1/2 செண்ட் ஒன்றும் உள்ளது.

2. மொத்தம் இரண்டு அயிடம் சொத்து என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எவ்வளவு செண்ட் அக்கிரிமெண்ட் போட்டேன் என்றால் 50 செண்டிற்கு போட்டேன். மேலும் 50 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது உள்ளதா என்றால் 5 1/2 ஏக்கர் உள்ளது. பிரதிவாதிகள் ஏற்ப்படுத்திக்கொடுத்த ஒப்பந்தத்தில் ஒரே ஒரு சொத்திற்கு தான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்து அந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் படிதான் பூமியில் உள்ளது என்றால் சரியல்ல, அதைவிட அதிகமாக உள்ளது. அதிகமாக எவ்வளவு உள்ளதாக சொல்கிறேன் என்றால் மொத்தம் ஒப்பந்த சொத்து 4 ஏக்கர் 17 செண்ட் ஆகும் அதில் 50 செண்டிற்கு தான் ஒப்பந்தம் போட்டுள்ளேன், மீதி எனது அனுபவத்தில் உள்ளது. தற்போது முழு சொத்தும் எனது அனுபவத்தில் உள்ளது.

3. நான் பிறந்தது முதல் மேற்படி சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். அதனால் சொத்தின் பௌதீக அமைப்பு எனக்கு தெளிவாக தெரியும் என்றால் சரிதான். எனது சொத்திற்கு மொத்தம் இரண்டு காலை எண்கள் உள்ளன. எனது சொத்திற்கு இரண்டு பட்டாக்கள் உள்ளன. பட்டா எண் எனக்கு ஞயாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தம் சொத்தின் பட்டா எண் என்ன என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் செக்குபந்தியும், காலை எண்ணும் மாற்றி எழுதப்பட்டுள்ளது. மேற்படி விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஒப்பந்தம் போட்டு ஒரு வாரம் கழித்து தெரியும். கிரைய ஒப்பந்த தேதி என்ன என்றால் 29.09.2020 ஆகும். கிரைய ஒப்பந்தம் மாலை 06.00 முதல் 07.00 மணிக்குள் போடப்பட்டது.

4. கிரைய ஒப்பந்தத்தை நான் படித்துப்பார்த்தேன் என்றால் சரியல்ல, படித்துப்பார்க்கவில்லை. கிரைய ஒப்பந்தம்படி முன் பணம் எவ்வளவு வாக்கினேன் என்றால் ரூ.10 லட்சம் வாங்கினேன். ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டு எனது சொத்து குறித்து ஒப்பந்தம் போடும் நான் கிரைய ஒப்பந்தத்தை படித்துப்பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் சொல்லும் கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். அதில் சொத்து விபரத்தில் விஸ்தீரணமும், காலை எண் மற்றும் பட்டா எண்ணும் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை அவர்கள் தான் செய்தார்கள். முதல் முதலில் பிரதிவாதி தாவா சொத்தை வாங்குவதால் அதன் பட்டா எண் பிரதிவாதிக்கு தெரியாது என்றும், நான் சொல்லிதான் கிரைய ஒப்பந்தத்தில் பட்டா எண்ணை பிரதிவாதி திருத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சாட்சிகள் உள்ளார்கள்.

5. கிரைய ஒப்பந்தம் போட்ட பிறகு ஒரு வாரம் கழித்து அதில் உள்ள தவறுகள் விபரம் தெரியவந்த பிறகு பிரதிவாதிக்கு நான் அது குறித்து

தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் தெரிவிக்கவில்லை என்றும், நான் சொன்னதன் அடிப்படையில்தான் கிரைய ஒப்பந்தத்தில் திருத்தங்கள் ஏற்ப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு 482 காலையில் உள்ள சொத்திற்கு கிரைய ஒப்பந்தம் போட்டேன். 485/2 காலைக்கு ஒப்பந்தம் போடப்பட்டதாக பிரதிவாதி சொல்கிறார் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் ஏற்ப்பட்டு ஒரு வாரத்திற்குள்ளேயே காலைகள் குறித்து எங்களுக்குள் பிரச்சினை ஏற்ப்பட்டது என்றால் சரிதான்.

6. ஒரு வாரத்திற்குள் பிரச்சினை ஏற்ப்பட்டதால் கிரைய ஒப்பந்தம் 482 காலைக்கு தான் போடப்பட்டது என்று சட்டரீதியாக பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 485/2 காலை தார் ரோட்டில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி இருக்கிறது என்றால் 460 அடி தூரம் இருக்கும். 482 காலை தார் ரோட்டை ஒட்டியே உள்ளது. எங்கள் ஊரில் ஒரு செண்ட் 2 லட்சத்திற்கு மேலே போகிறது. ஒப்பந்தம் போட்ட சமயத்தில் ஒரு செண்ட் 1.5 லட்சத்திற்கு போடப்பட்டுள்ளது. ஒப்பந்தம் போட்டு 6 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். ஒப்பந்தத்திற்கு பிறகு அந்த பகுதி வளர்ச்சியடைந்துள்ளது என்றால் இல்லை. பொதுவாக சொத்தை விலைக்கு வாங்க விரும்புபவர்கள் ரோட்டை ஒட்டி உள்ள சொத்தை வாங்க விரும்புவார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் ரோட்டை ஒட்டி உள்ள சொத்தை வாங்குவதற்கு பிரதிவாதி ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் சரிதான்.

7. ஒப்பந்தம் போட்ட பிறகு ரோட்டை ஒட்டியுள்ள சொத்திற்கு ஒப்பந்தம் போடவில்லை என்றும், அதே காலையில் உள்ளே உள்ள சொத்திற்கு நான் ஒப்பந்தம் போட்டதாக நான் கூறியதால்தான் இந்த பிரச்சினை ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. 485/2 காலைக்கு செல்வதற்கு எவ்வளவு அடி வழித்தடம்

உள்ளது என்றால் 20 அடி வழித்தடம் உள்ளது. இடையில் வேறு ஒருவரின் சொத்தின் பாகத்தை தான்டிதான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. நான் சொல்லும் 20 அடி தடம் ஏற்கனவே பள்ளம் வாய்க்கலாக இருந்து தற்போது ரோடாக உள்ளது என்றால் சரியல்ல. அந்த ரோட்டை பொதுத்தடமாக அனைவரும் பயன்படுத்துகிறார்கள் என்றால் சரிதான்.

8. 482 காலைக்கு வடக்கில் எனக்கு மீதி சொத்து உள்ளதா என்றால் ஆமாம். இதே காலையில் எனது சகோதரிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து போக வேறு சொத்து உள்ளதா என்றால் இந்த காலையில் இல்லை வேறு காலையில் தாவா சொத்தை ஒட்டியதுபோல் உள்ளது. அதன் காலை எண் 486 ஆகும். பிரதிவாதி எனக்கு ஒரு பால்காரர் மூலம் அறிமுகம். அந்த பால்காரர் பக்கத்து பங்குதாரர். எனது சொத்து குறித்து வேறு நபர்களிடம் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். அதற்கு பெற்றுக்கொண்ட பணத்தை மீண்டும் திருப்பி கொடுத்துவிட்டேன். எவ்வளவு பணம் என்றால் ரூ.10 லச்சம். அது இதே சொத்திற்கா என்றால் 482 சொத்திற்கு.

9. நான் சுதாவிடம் பெற்ற பணைத்தை தான் மற்றொரு ஒப்பந்ததக்காரரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பணத்தைதான் கொடுத்தேன். எப்போது கொடுத்தேன் என்றால் சுதா பிரச்சினை செய்தவற்கு முன்பே கொடுத்துவிட்டேன். ஒப்பந்தம் போடும்போது சொத்தை நிலஅளவையர் கொண்டு அளக்கவில்லை. கிரைய ஒப்பந்த காலம் 3 மாத காலமாகும். ஒரு வாரத்திற்குள் பிரச்சினை ஏற்ப்பத்தால் 3 மாதத்திற்கு முன்பே காவல் நிலையத்தில் சுதா புகார் கொத்தார் என்றால் சரிதான். சாட்சி மீண்டு புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது சுதா போலிசை வீட்டீற்கு கூட்டிவந்தார் என்று சாட்சியம் அளிக்கிறார். என்ன காரணத்திற்காக புகார் கொடுத்தார்கள் என்று தெரியாது.

10. காவல் நிலையத்தில் போலீசார் விசாரணையில் சுதாவிடம் பெற்ற பணத்தை மூன்று மாத்தில் திருப்பி கொடுத்துவிடுவதாக எழுதிக்கொடுத்து வந்தேன் என்றால் போலீசை வைத்து சுதா மிரட்டினார் அதனால் எழுதிக்கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலம் நான் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தது என்றால் அவர்களே எழுதிக்கொண்டார்கள் நான் கையொப்பம் மட்டும் செய்தேன். நான் காவல் நிலையத்தில் ஒப்புக்கொண்டவார இன்றைய தேதிவரை நான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்குரை பத்தி 6 ல் பிரதிவாதி பயங்கர ஆயுதங்களுடம் அத்துமீறி நுழைந்ததாக சொல்லி உள்ள நான் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். சிவில் வழக்கு என்று சொல்லிவிட்டார்கள்.

11. நான் புகார் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும். பிரதிவாதியிடம் பெற்ற முன் தொகையை திருப்பிக்கொடுக்க கூடாது என்ற என்னத்தில்தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 13.02.2021 ம் தேதியன்று வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதன் பத்தி 7 ல் காலக்கெடு முடிந்துவிட்டால் முன் தொகையை இழந்துவிடவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் மூலமே பிரதிவாதியிடம் வாங்கிய 10 லட்சத்தை கொடுக்கக்கூடாது என்ற என்னம் தெரிகிறது என்றால் சரியல்ல. அதே போல் வழக்குரையிலும் சொத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

12. உடன்படிக்கை நடைமுறையில் இருந்தபோது அறிவிப்பு அனுப்பாமல் காலம் கடந்த வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரை பத்தி 10 ல் பிரதிவாதி சொத்தை கேட்டபோது

முதலில் நான் மறுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதனால் மறுத்தேன் என்றால் ஏற்கனவே பிரதிவாதி என்னிடம் பிரச்சினை செய்தார். ஏற்கனவே பிரதிவாதியுடன் பிரச்சினை இருந்தபோது பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்ப்பட்டபோது அதனை நான் படித்துப்பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரை பத்தி 11ல் பிரதிவாதி ரூ.5 லட்சம் அதிகம் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13. பிரதிவாதி கொடுத்த 10 லட்சத்திற்காக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தற்போது நான் கணபதிபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் வேறு முவரியில் குடியிருந்து கொண்டு பொருந்தொழுவில் உள்ளதனாக பொய்யாக சாட்சி சொல்கிற்றேன் என்றால் அங்கும் தொட்டம் உள்ளது.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.01.08 11:21:26 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.